ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

வேங்கடேச தாஸன் ஶ்ரீ ராகவன் (சிகாகோ) அருளிச்செய்த

# ॥ பொமானாப்பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

# ॥ பொமானாப்பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே ॥

பதம் தீண்ட அரங்கன் புகலார்வம் கொண்டு⋆
பெரும் கடலைக் கடந்திவ்விட மடைந்துகந்த வேளை⋆
பலம் கொண்ட அரவணையான் திருமேனித்துயிலன்⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில்⋆
சலம் கொண்டு பனிபொழியும் தண் விழியோடாங்கே⋆
வலம் வந்து ஊர்தியேறும் புன்னகைப் பெண் ஒருத்தி⋆
தலம்கண்ட எழில் கொண்ட மயிலோடு விளையாடச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (1)

கண்டமும் இப்பனிமழையும் பவனி வருமெல்லாம்⋆
துன்பமுய்யத் திருவுடன் திறன் கொண்டெடுக்கும்⋆
முன் செய்த வினையறுத்துத் தொண்டனவன் பவமது போக்கிப்⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில்⋆
எத்தடையும் நகும் செம்மல் இசைந்திங்குத்துயில⋆
பெண்கொடி தண்விழிப் பெருக்கோடு பசுமை வளம் பொழிய⋆
மணம் செய்து உறவாடும் மையலாளைப் போற்றச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (2)

பெரிய ஓர் உருவமதால் பகையனைத்தும் திகைக்க⋆
தேவரோடு வானவர்கள் இசைக்க⋆ இராமன் தன்னை
எண்ணி யவன் மார்திறந்து மால் காட்டும் அநுமனுடன்⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில்⋆
தரணியில் பெரும் செல்வத்துடை யனவன் உறையும்⋆
நால் மறையும் வேள்விகளும் போற்றும் பெரும் தவத்தோர்⋆
தலம் கண்டு அவ்வறவோர் விழியோடு உறவாடச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (3)

காலையதனில் பகலவன் விரிக்கக்⋆ கங்குலவள்
மலையதனில் பனியாடை சுருட்டிப்பதறி முன்னோட⋆ அலர்மேல்
மங்கையவள் அகம் குளிர்ந்து உலகுடையவன் மார்போடு⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில்⋆
மலையடைந்துப் பொன்வேய்ந்த உச்சிதனில் கூடும்⋆
பெரும் வள்ளல் இந்திரனவன் தொடுத்த பெருமுழக்கம்⋆
கலியில் வென்ற கோவிந்தன் தன்னொடு உறையாடச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (4)

திருவுடனன்று உட்புகுந்தடைந்த அருளாளா வரத
வேந்தே⋆ அரியுனைத் தொழப் பவமிருபதுமே நீங்கத்⋆
தன் நிகரில்லான் முன்னாலிலையில் துயின்ற ஒருபாலகனைப்⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில்⋆
உன் பரிவில் ஒளியடைந்து இன்றே கிரிகரி வீழ்ந்து⋆
உளமதனில் வீடே வேண்டி என் நாவாலும் மொழிய⋆ முன்
மன்னுபுகழ் வேதியர்கள் போல் கொண்டாடச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (5)

அண்டமில் எந் நினைவுகலும் இவ்வுறுப்புகளும் எல்லாம்⋆
வாதமும் செய்து இவ்வுதட்டாலே மதம் கொண்டுதிரியும்
என் மனமதடக்கி⋆ பெண்ணவள் தன்கண்ணால் சாபமது நீக்கிப்⋆
பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில்⋆
எண்திசையும் புகழ்ச்செல்வன் பெற்றெடுத்த பிராட்டியவள்⋆
அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய் இசையவள் பொழிய⋆
வண்டு பல இசைபாட மயிலாடும் பாங்கை காணச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (6)

நரசிங்கமதாய்ப் பொங்கியெழ அரக்கர் அவுணனையே⋆
உய்க்கத் தன் நகத்துடன் பெருகித்திரண்டோடுமந்த⋆
இரத்தம் வாய் வைத்து நன்குறிஞ்சிப் புகலளித்துப்⋆
பாரினில் பெரும்தோளன் மகிழ்ந்தினிது பரவியுறை கோயில்⋆
அவுணன் தன் சொல் உகவாச் சிறுவனத் தனயனிடம்⋆
பெரும் வள்ளலவன் அகமே விரியப்பொழியும் பெம்மான்⋆



www.prapatti.com

தொண்டர்வாழ் மாமலைமேல் மிகவிரும்பி மறையோதச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (7)

தங்கும் உன் பெரு உடலுள் வானவர்களோடிங்கே⋆
நாடிவரும் பாவலர்கள் மேவி பலர்பாடிக் கூடித்தொழ⋆
எங்கும் வெண்ணெயுண்ட கண்ணன் நீயே யென்றுணர்ந்து⋆ இப்-
பாரினில் போகத்தோருய்ய ஈசனவன் பரவியுறை கோயில்⋆
இங்கேகும் பெரும் தண் புயலால் பாவைகள் மெல்லிடை குழிய⋆
கூரையதனில் பெரும்பனி படர்ந்த மாவீடுகலும் குளிர⋆
புகுந்தானென்றே உணர்ந்து கண்ணனுன் புகழ்பாடச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (8)

விளங்கா உனைத் தமிழ் மறை கொண்டு முறையே யறிந்து⋆
பேர்ப்பதின்மர் ஆழ்வார்களாய்ந் தெடுத்த பெரியோய்⋆
அருளிச்செயல் இசைகேட்டு இன்நகர் வந்து உவந்து⋆
நாள்தோரும் அமர்ந்த வரங்கன் பரவியுறை கோயில்⋆
பெரு உடலில் பனி தழுவப் பால் பொழியும் பசுக்கள்⋆
வளம் கொண்ட அரும்செல்வம் அடைவிக்கும்⋆ ஓர்
நம் வண்சடகோபன் சொல் பாங்காய் பரவச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (9)

ஓயாத மறையதனால் பெருவரதன் கண்டெடுத்துப்⋆
பார்புகழும் இராமாநுசன் பெரும்தேவிக்கும் தங்கைக்கும்⋆
சலமெடுத்த தனித்தொண்டன் பாங்காக இப்புவியோர்⋆
பணிந்துய்ய அத்திருவரங்கத்தோன் பரவியுறை கோயில்⋆
மாறாத பொன் வட்டில் நிறையப்பெருகி விரசா நீர் நிரம்ப⋆
வைகுந்த நாடுமடைய தன் திருவடிகாட்டித் திரியும்⋆
பொங்கிய கீர்த்தி இராமாநுசனைப் பணியச் சற்றே⋆
பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (10)

உத்தமனாம் ஓணத்தான் போற்ற அகமனைத்துமடைய⋆
தண் எழில் சேர் தேசிகனுமாங்கே யுறைய⋆
போகமறுத்துத் தொண்டனவனையே ஏற்றப்புகும்⋆
நெடியபிரான் அமர்ந்தினிதரங்கன் பரவியுறை கோயில்⋆

கலங்காதித் தரிசனத்தைக் காத்தளித்த பெரியோன்⋆
    கவிதார்க்கிக சிங்கமென எத்திசையும் ஏற்றியம்பும்⋆
இப்புவியில் நிகரில்லா ஆசான் தாள்பணியச் சற்றே⋆
    பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (11)

நால்வேதமும் வடுக்களும் பவனிவரக் கூடுமெல்லாம்⋆
    அரவங்கள் விரித்தாடச் சற்று ஒளிசிந்தக் கண்டே⋆
கருளப்புள் பீடமதில் நிறைந்தினிது அவனே யெழப்⋆
    பாரினில் போகத்தோருய்ய அரங்கன் பரவியுறை கோயில்⋆
காற்றாலன்று அக்கடலலைகள் மோத பெரும்புருவம் விரிய⋆
    நாலொன்பது கணங்கள் நகண ரகணங்களே மொழிய⋆
மால் நாடும் வாகனமாம் பறவையவன் பாதமே பணியச் சற்றே⋆
    பொமானாப் பொன்னகரம் சென்றடை யென்னெஞ்சமே (12)

பொங்கு கலிகண்டு அக்கிரகம் ஒன்பதும் முன்னேற⋆
    பதக்கமலம் பற்றியே அவ்வாசான் தனியருளால் பின்னேக⋆
தங்கமதாம் போகத்தோர் பிறவாமலுய்யப்⋆ பரமகுருவாம்
    வேதாந்த சடகோபன் தொழுதளித்த அவன் பரவியுறை கோயில்⋆
மாமுனிவன் நாராயணன் அரங்கநாத சடகோபனருளே பெற்று⋆
    பாராலும் தெய்வங்கள் பொலிக பொலிக என்றுரைத்தேகும்⋆
தொண்டர் தொண்டனிவனுரைத்த பதின்மூன்றும் வல்லார்கள்⋆
    போகத்தோடுறவாட வடதுருவப் பனிநகரங்கள் அடைவர்களே (13)

॥ ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com